# இல்லறத்தில் அன்பு : திருக்குறளும் திருவிவிலியமும்

ந.ஆ. வேளாங்கண்ணி (Veilankanni N.A.),
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),
திருப்பத்தூர் - 635601, திருப்பத்தூர் மாவட்டம்.

**முன்னுரை**

இல்லம் என்பது வெறும் கற்களால் மட்டுமன்றி கணவன், மனைவி, பிள்ளைகள், உறவினர், சுற்றத்தர், என்ற உறவுகளால் அன்பை அடித்தளமாகக் கொண்டு கட்டப்பட்டிருக்கிறது. இத்தகைய இல்லறம் இயற்கையாகப் புனைந்த ஒரு அற்புத அமைப்பு. இவ்அமைப்பில் அன்பு என்பது பரஸ்பரமாக இருத்தல் வேண்டும் என்று திருக்குறள், திருவிவிலியம் ஆகிய இரு நூல்களும் வலியுறுத்துகின்றன. இவ்விரு நூல்களில் அன்பின் இலக்கணம் யாது? அன்பை வெளிப்படுத்தும் முறையும் விதமும் எத்தகையது? அன்புடையோர் நிலையும் அதன் மேன்மையும் என்ன? அன்பு இல்லாத நிலையும் அதனால் ஏற்படும் இன்னலும் என்ன? என்னும் வினாக்களை முன்வைத்து இக்கட்டுரை ஆராய்கிறது.

**சங்க இலக்கியத்தில் அன்பு**

சங்க இலக்கியப் பாடல்கள் பெரும்பாலும் அன்பை முன்வைத்துப் பேசுகின்றன. அன்பின் ஐந்திணைக்குரிய குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற பகுதிகளுக்குரிய பாடல்கள் நிறைந்தது குறுந்தொகை இதில்,

**“யாயும் ஞாயும் யாரா கியரோ**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்**
**யானும் நீயும் எவ்வழி அறிதும்**
**செம்புலப் பெயல்நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே”**[1]

நாம் இருவர் யார் யாரோ தெரியவில்லை. ஆயினும் தாய் வழியாக வந்த உறவாலும் தந்தை வழி வந்த உறவாலும் அல்லது அறிந்து பழகிய பழக்கத்தாலும் அன்புடைய நெஞ்சங்களாகத் தெய்வத்தின் அருளால் இல்லறத்தில் இணைந்துள்ளோம் என்று தங்களின் அன்பை நினைத்து மகிழ்கின்றனர் எனக் குறுந்தொகைப் பாடல் குறிப்பிடுகிறது. மேலும்

இல்லறத்தில் புதியதாகப் பெண்ணானவள் புகுந்ததும் தனக்குச் சமைக்கத் தெரியாமல் இருப்பினும் தன் கையால் கணவனுக்குச் சமைத்தளிக்க வேண்டுமென்பதும் அவள் விருப்பம். ஆகையால், தயிர்க் குழம்பு வைத்தாள். தோய்ந்த கட்டித் தயிரைக்

கையினால் பிசைந்து கையைக் கழுவாமல் அப்படியே தன் தூய ஆடையில் துடைத்துக் கொண்டாள். குழம்பைத் தாளிக்கும்போது ஏற்பட்ட புகை அவளது மையுண்ட கண்களைக் கலங்கச் செய்தது. இவ்வாறு, அவள் செய்த குழம்பைக் கணவனுக்கு இட்டாள். அவன் இக்குழம்பு சுவையாய் உள்ளது என்று பாராட்டி உண்டான். அவள் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. இக்காட்சியைக் கண்டு மகிழ்ந்து அவளை வளர்த்த செவிலித்தாய் அவளைப் பெற்றெடுத்த நற்றாயிடம் கூறியதாக,

**“முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ**
**குவளை உண்கண் குய்ப்புகைக் கமழக்**
**தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்**
**இனிதெனக் கணவன் உண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே”**[2]

என்ற பாடல் அமைகிறது. இவ்வாறு, சங்ககால இல்லறத்தில் கணவனும் மனைவியும் அன்பு கொண்டு ஒழுகினர்கள் என்பதை அறியமுடிகிறது.

**அன்பின் இலக்கணமும் விளக்கமும்**

அன்பு என்பது மனித குலத்தின் உயிர் நாடி. இம்மனித குலம் இன்னமும் உயிர் வாழ்வதே அன்புடையவர்கள் இருப்பதால்தான். அன்பைக் கொடுக்கவும் பெறவும் விரும்புவதே மனித இயல்பு. இந்த இயல்பு இல்லறத்தில் இயல்பாக இருக்கவேண்டும். இத்தகைய அன்பைப்பற்றிய விளக்கத்தைத் திருக்குறள் மற்றும் திருவிவிலியம் ஆகிய இரு நூல்களும் எடுத்துரைக்கின்றன. அன்பு என்பது ஒரு வகையான பிணைப்பு அது எவ்வாறு காணப்படும் என்று வள்ளுவர் எடுத்துரைக்கிறரர்.

**“அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு**
**என்போ டியைந்த தொடர்பு”**[3]

உயிரும் உடலும் எவ்வாறு இணைந்து இருக்கிறதோ அதுபோல அன்பும் செயலும் இணைந்திருக்க வேண்டும். இங்கு உடலும் உயிரும் என்பது ஒன்றை ஒன்று விட்டு பிரிக்க இயலாது. அவ்வாறு பிரிந்தாலும் உடலும் உயிரும் இயல்பற்ற நிலையாக மாறிவிடுகிறது. அதுபோல அன்பை உடலுக்கும் உயிருக்கும் ஒப்புமைப்படுத்தி விளக்குகிறார். அதுபோல அன்பும் அன்பின் செயல்களும் ஒன்றாக இணைந்திருக்க வேண்டும் என்று அன்பிற்கு விளக்கம் தந்து இலக்கணம் வகுத்துள்ளார்.

இத்தகைய அன்பு திருவிவிலியத்தில் ஒரே வரியில் கூறப்படுகிறது. **“அன்பே உங்கள் வாழ்வுக்கு ஆணிவேரும் அடித்தளமுமாய் அமைவதாக”**[4] இவ்வாறு அமைந்தால் வாழ்க்கையே வசப்படும் என அறியமுடிகிறது. இத்தகைய அன்பை இரண்டாகப் பிரித்து விளக்கம் அளித்து இலக்கணம் வகுத்துள்ளார் இறைமகன் இயேசு கிறிஸ்து. **“உன் முழு**

**இதயத்தோடு கடவுளிடம் அன்பு செலுத்து, உன்மீது அன்பு கூர்வதுபோல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக”[5]** திருச்சட்ட நூல் முழுமைக்கும் இறைவாக்கு நூல்களுக்கும் இவ்விரு கட்டளைகளே அடிப்படையாக அமைகின்றன. அன்பு என்பது ஏதோ அறைகுறையாகவோ அல்லது கடமைக்காகவோ செய்யக்கூடியதாக இல்லாது முழுமனதோடு செய்தல் வேண்டுமென்றும், அத்தகைய அன்பு முதலில் இறைவனை நோக்கியதாகவும் இருக்கவேண்டும் என்கிறார். பிறகு பிறரை அன்பு செய் அது எவ்வாறு எனில் வழக்கமாகத் தான் நன்றாக இருக்கவேண்டும் என்றுதான் நினைப்பார்கள் அதுபோலதான் உன்மீது அன்பு கூர்வதுபோல பிறரை அன்பு செய் என்று இறைமகன் இயேசு கிறிஸ்து கற்றுத் தருகிறார். ஆகவே அன்பு என்பது அடிப்படையாகவும் ஆணிவேராகவும் கொடுக்கவும் பெறுவதுமாக அமைவதோடு அது எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது என்பதையும் காணமுடிகிறது.

**அன்பை வெளிப்படுத்தும் முறையும் விதமும்**

அன்பை வெளிப்படுத்த பல்வேறு நிலைகளைக் கையாளுவது உண்டு. மலர், பணம், பொருள், சைகை, வார்த்தைகள் இதுபோன்றவற்றின் வழியாக அன்பை வெளிப்படுத்துவதைக் காணமுடிகிறது. ஆனால் இங்கு வள்ளுவர் மிகத் துள்ளியமாக உண்மையான அன்பு எவ்வாறு வெளிப்படும் என்று கீழ்க்காணும் குறளில் விளக்குகிறார்.

**“அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**
**புன்கணீர் பூசல் தரும்”[6]**

இதயத்தில் இருக்கும் உண்மையான அன்பை தாழ்ப்பாள் கொண்டு பூட்டி வைத்து மறைக்க முடியாது. மாறாக உண்மையான அன்பு உடையவர்கள் அதைக் கண்ணீர்த் துளிகள் வழியாக வெளிப்படுத்துகிறார்கள் என்கிறார். இதைத்தான் சில நேரங்களில் ஆனந்தக் கண்ணீர் என்கின்றனர். இக்கண்ணீரானது எப்பொழுதும் வருவதில்லை. மாறாக எப்போதாவதுதான் வரும் அத்தகைய உண்மையான கண்ணீரைத்தான் வள்ளுவர் சுட்டிக்காட்டுகின்றார். ஆகவே இத்தகைய உண்மையான அன்பு நிறைந்த ஆனந்தக் கண்ணீர் வருகின்ற அளவிற்கு உங்கள் வாழ்க்கையில் செய்துதான் பாருங்களேன் என்கிறார். மேலும்

**“அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்து**
**இன்புற்றார் எய்தும் சிறப்பு”[7]**

அன்பு செய்து பாருங்கள். பிறகு அந்த அன்பானது எந்த அளவிற்கு ஒருவரின் வாழ்க்கை சிறப்புற அமையக் காரணமாகிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும் என்கிறார். இவ்வாறு உண்மையான அன்பையும் அதை வெளிப்படுத்தும் விதத்தையும் அறியமுடிவதோடு, அன்பினால் அடையும் மேன்மையும் எவ்வாறு என்பதைக் காணமுடிகிறது.

**அன்புடையோர் நிலையும் அதனால் அடையும் மேன்மையும்**

அன்பின் மேன்மையைப் பற்றிக் கூறுகையில் அன்பு, அன்பு, அன்பு, பண்பினில் உயர்ந்தது அன்பு. விண்ணில் மண்ணில் வாழும் யாவும் பேசும் மொழிதான் அன்பு. அன்புக்காய் அனைத்தையும் இழந்திடுவோம் என்னும் கிறிஸ்தவ பக்திப் பாடல் அன்பின் சிறப்பைப்பற்றிப் பாடுகிறது. ஆம் அன்பு என்பது அனைவரின் வாழ்விலும் அடிப்படை அமைப்பாகிறது. இத்தகைய அன்புள்ளம் கொண்டோரின் நிலை என்னவென்று அறியவும் முடிகிறது.

**"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்**
**மறத்திற்கும் அஃதே துணை"[8]**

அன்பு என்பது அறச் செயல்களுக்கு மட்டும் துணையில்லை. மாறாக அது மிகுந்த வீரத்தையும் கொடுக்கும் என்பதை அறியமுடிகிறது. மேலும், அன்பின் நிலை எதுவாகினாலும் உயர்ந்து காணப்படுகிறது என்பதை கீழ்க்காணும் பாடலின் மூலம் அறியமுடிகிறது.

**"உப்பு இலிப் புற்கை உயிர்போல் கிளைஞர் மாட்டு**
**எக் கலத்தானும் இனிது"[9]**

உறவினரைத் தம் உயிர் போலக் கருதும் அன்புடையோர் உப்புகூடப் போட வழியற்றுக் கொடுக்கும் கூழைக் கையாகிய தட்டில் ஏந்திக் குடித்தாலும் இனிமை தருவதாகும். இப்பாடலில் இரண்டு செய்திகள் புலனாகின்றன. ஒன்று வறுமையிலும் வறுமை என்பதை அறியமுடிகிறது எவ்வாறெனில் சிறிதளவு உப்புக்கும் உணவருந்தும் தட்டிற்கும் கூட வழியற்ற நிலை. மற்றொன்று அத்தகைய நிலையிலும் பிறருக்கு உணவிட வேண்டும் என்ற உயர்ந்த அன்பு. இத்தகைய வறுமையிலும் உணவளித்ததால் என்னவோ உப்பிட்டவரை உள்ளளவு நினை என்னும் முதுமொழி மூத்தோர் உரைத்தார் போலும் என்பதை அறியமுடிகிறது. மேலும்

**"அபரானப் போழ்தின் அடகு இடுவரேனும்**
**துமர் ஆயார் மாட்டே இனிது"[10]**

வந்தவருக்கு உணவு பரிமாறப் பலவகை உணவுகள் இல்லை என்றாலும் ஒற்றைக் கீரை உணவையே அன்புடையார் கொடுத்தாலும் அது பசியைப் போக்கும் என்பார் இப்பாடல் மூலம் ஏழைகளுக்குத்தான் பகிர்வு மனம் உண்டு என்பதை அறிந்துகொள்ளவும், ஏழைக்கு ஏற்றது எல்ருண்டை என்கின்ற முது சொல்லையும் அறியமுடிகிறது. இத்தகைய வரிகளை மகாத்மா காந்தியின் வாழ்வில் காணமுடிந்தது. **"உடைமையற்றவனிடம்தான் உண்மையான அன்பு வெள்ளமெனப் பெருக்கெடுக்கும்"[11]** ஆகவே இத்தகைய மேலான அன்பை இனிது, இனிது என்று இனியவை நாற்பது கீழ்க்காணும் பாடல் வரிகளை முன்வைத்துப் பேசுகிறது.

**"தங்கண் அமர்பு உடையார் தாம் வாழ்தல் முன் இனிதே**
**அம் கண் விசும்பின் அகல் நிலாக் காண்பு இனிதே**
**பங்கம் இல் செய்கையர் ஆகி, பரிந்து பயர்க்கும்**
**அன்புடையர் ஆதல் இனிது"**[12]

அன்பிற்கு உரியவர் சிறப்புற வாழ்தலைப் பார்த்தல் இனியது. விரிந்த வானில் முழுநிலவைக் காணுதல் இனிது. குற்றம் இல்லாத செயல் உடையவராக அனைவரிடமும் அன்பு காட்டுதல் இனிது. இத்தகைய இனிய அன்புடையவர்கள் தங்கள் வாழ்க்கையில் **"அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு"**[13] உண்மையான அன்பு உடையவர்கள் தன் உடலில் இருக்கும் எலும்பு கூட பிறருக்கு பயன்படட்டும் என்பார்கள். இவ்வரிகளை சில நேரங்களில் காணமுடிகிறது. எவ்வாறு எனில் தங்களின் உடல் உறுப்புகள் செயலிழந்த தருணங்களிலும் ஆபத்தான சூழ்நிலைகளிலும் உடல் உறுப்புகளையும் இரத்தத்தையும் தானமாகக் கொடுக்கும் அன்புடையோர் இவ்வுலகில் வாழ்ந்துகொண்டுதான் உள்ளனர் என்பதை அறியமுடிகிறது. குறிப்பாக வெள்ளப் பெருக்கினாலும் கஜாப்புயல் காற்றினாலும் கொரோனா காலச்சூழலில் காணமுடிந்தது. சிலர் தங்களின் உயிரைப் பணையம் வைத்து குழந்தைகளையும் முதியவர்களையும் மற்றவர்களையும் காப்பாற்றிய நிகழ்வுகளை ஆங்காங்கே கண்கூடாகக் காணமுடிந்தது.

மேலும் இந்த ஒத்தக்கருத்தையே திருவிவிலியமும் கூறுகிறது. **"அனைத்துக்கும் மேலாக அன்பையே கொண்டிருங்கள்."**[14] இவ்வாறு அன்பைக் கொண்டாடும் எந்த ஒரு குடும்பமும் ஒரு பல்கலைக்கழகமாகக் கருதப்படுகிறது. இப்பல்கலைக்கழகத்தில் ஒவ்வொரு மனிதரும் பிறந்து, வளர்ந்து, ஆளாகிக் கற்றுக் கொள்ளும் அனைத்தையும் பொறுத்தே ஒவ்வொருவரின் வாழ்வு என்னும் படகு பதற்றமின்றி ஓடும் என்பதை அன்பின் வழியாக அறியமுடிகிறது. ஆகவே இத்தகைய செயல்களின் மூலம் உண்மையான அன்பு மேன்மை அடைகிறது என்றும் அன்பு கொண்டோர் என்றுமே மேன்மையுடையவர்களாகக் கருதப்படுகின்றனர் என்பதை அறிவதோடு உண்மையான அன்பு இல்லாதோரின் நிலையும் அதனால் ஏற்படும் இன்னல்களையும் காணமுடிகிறது.

**அன்பு இல்லாதோர் நிலையும் அதனால் ஏற்படும் இன்னலும்**

அன்புப் பரிமானம் நிகழாதபோது ஒருவன் உயிரோடு வாழ்ந்தாலும் அது பயனற்றதாகக் கருதப்படும் என்பதையும் மேலும் இந்த அன்பு இல்லை என்றால் மனிதனின் உடல் எவ்வாறு இருக்கும் என்று பதிலளிக்கிறார் வள்ளுவப் பெருந்தகை கீழ்க்காணும் குறளில்,

**"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு"**[15]

அன்பு வழியில் இயங்குவதே உயிருள்ள உடலாகும். இவ்வாறு இல்லை எனில் அது எலும்பைப் போர்த்திய வெறும் தோல் போன்ற உடலாகும். இந்த உடலானது தோல் போர்த்தியிருந்தால் மட்டுமே பார்ப்பதற்கு அழகாகவும் அது உடலாகவும் கருதப்படுகிறது. இல்லை என்றால் அது பார்ப்பதற்கே அருவருப்பைத் தரக்கூடியதாகக் காணப்படும். ஆகவே உடலானது அழகுற வேண்டுமானால் அன்புசெய்து உடலை அழகாக்கிக்கொள்ளுங்கள் என்பதை அறியமுடிகிறது. ஆனால் இன்றைய சூழலில் இதைவிடுத்து அழகுசாதனங்களில் நாட்டம் செலுத்துவதைக் காணமுடிகிறது. மேலும்

**“புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை**
**அகத்துறுப்பு அன்பி லவர்க்கு”**[16]

அன்பு இல்லாமல் புறத்தோற்றம் அழகாய் இருந்து பயன் என்ன? அன்பு இருந்தால் அக உறுப்புகளும் புறஉறுப்புகளும் அழகு வாழய்ந்தவையாகக் காணப்படும். இதன் அடிப்படையில் எழுந்ததுவோ என்னவோ அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்னும் முதுமொழி.

இத்தகைய ஒருமித்த சிந்தனையை திருவிவிலியத்திலும் காணமுடிகிறது. **“என் உடலையே சுட்டொரிப்பதற்கென ஒப்பிவித்தாலும் என்னிடம் அன்பு இல்லையேல் எனக்குப் பயன் ஒன்றுமில்லை”**[17] என, இறந்த பிறகு என்ன இருக்கிறது? என்பது மனித உடலை ஒப்பிட்டே அன்பைப்பற்றி விளக்கம் அளிக்கப்பட்டு இருக்கிறது என்பதை அறியமுடிகிறது. மேலும் அன்பு இல்லாதவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று பட்ட மரத்திற்கும் புழுவிற்கும் ஒப்பிட்டுப் பேசப்படுகின்றன கீழ்க்காணும் குறள்கள்.

**“அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
**வற்றல் மரந்தளிர்த் தற்று”**[18]

இதயத்தில் அன்பு இல்லாதவர்களின் வாழ்க்கையானது பாலைவனத்தில் காணப்படும் பட்டமரம் தளிர்த்தது போன்றதாகும். பொதுவாகப் பாலைவனத்தில் தண்ணீர் இன்றி மரம், செடிகொடிகள் வளர்வது என்பது அரிது. இத்தகைய வறட்சித்தன்மைதான் அன்பற்றவர்களின் நிலை என்பது குறியீடாகக் காட்டப்படுகிறது. மேலும்,

**“என்பி லதனை வெயில்போலக் காயுமே**
**அன்பி லதனை அறம்”**[19]

எலும்பில்லாத புழு வெயிலில் மிகுந்த துன்பத்தை அடையும் அதுபோல அன்பில்லாதவர்கள் வாழ்க்கையினை அறம் வருத்தும் என்பதை அறியமுடிகிறது.

பல நேரங்களில் கட்டாயத்தின் பேரில் பேருக்காக ஒரு சில தவிர்க்கமுடியாத குடும்ப நிகழ்ச்சிகளுக்குச் செல்வோர் சிலர் உள்ளனர் என்பதை இச்சமுதாயத்தில் கண்கூடாகக் காணமுடிகிறது. இப்படிப்பட்டவர்கள் அந்நிகழ்வில் கலந்துகொண்டு அங்கு இடுகின்ற

சுவையான அன்னத்தைக்கூட சுருக்கென்று குறைகளைச் சுட்டிக்காட்டி அதை பெரிதாக் கூறுவர் என்பதை கீழ்க்காணும் வரிகளிலிருந்து அறியமுடிகிறது.

**“பொற் கலத்துப் பெய்த புலி உகிர் வான் புழுக்கல்**
**அக்காரம் பாலலோடு அமரர் கைத்து உண்டலின்”**[20]

உள்ளத்தில் அன்பு இல்லாதார் புலியினது நகம் போன்ற வெண்ணிறச் சோற்றைப் பாலோடும் சர்க்கரையோடும் கலந்து பொன் தட்டில் இட்டுக் கொடுத்தாலும் அது இனிக்காது. மேலும்,

**“நாள்வாய்ப் பெறினும் தம் நள்ளாதார் இல்லத்து**
**வேளாண்மை வெங் கருனை வேம்பு ஆகும்”**[21]

பகற்பொழுதில் மனத்தில் அன்பு இல்லாதார் அளிக்கின்ற பொரியலுடன் கூடிய சோறு வேம்பைப்போலக் கசக்கும். இவ்வாறு அன்பற்றவர்கள் உயர்வான உயிர் தரும் உணவு கொடுத்தாலும் அது வீண்தான் என்று அன்பற்றவர்களின் நிலையைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுவதை அறியமுடிகிறது. ஆகவே எல்லாம் இருந்தும் அன்பு என்ற ஒற்றைச் சொல் இல்லையென்றால் அகிலத்தில் உள்ள அத்தனையும் வீணானவை எனக் கருதமுடிகிறது.

**“இல்லானுக்கு அன்பு இங்கு இடம் கொருள் ஏவள் மற்று**
**எல்லாம் இருந்தும் அவற்கு என் செய்யும் நல்லாய்**
**மொழி இல்லார்க்கு ஏது முதுநூல் தெரியும்**
**விழி இலார்க்கு ஏது விளக்கு”**[22]

பேசமுடியாத ஊமைக்குப் பழம் பெரும் நூல்களால் என்ன பயன்? கண்கள் இல்லாத குருடர்க்கு விளக்கு இருந்து என்ன பயன்? அதுபோல இடம் பொருள் ஏவலாளர் முதலிய எல்லா வசதிகள் இருந்தும் அன்பு இல்லாதவனிடம் அவற்றால் என்ன பயன்? இத்தகைய ஒருமித்தக் கருத்தைத் திருவிவிலியத்தில் காணமுடிகிறது. **“இறைவாக்கு உரைக்கும் ஆற்றல் எனக்கு இருப்பினும் மறைபொருள் அனைத்தையும் அறிந்தவனாய் இருப்பினும் அறிவெல்லாம் பெற்றிருப்பினும் மலைகளை இடம் பெயரச் செய்யும் அளவுக்கு நிறைந்த நம்பிக்கை கொண்டிருப்பினும் என்னிடம் அன்பு இல்லையேல் நான் ஒன்றுமில்லை”**[23] இங்கு இரண்டு செய்திகளைக் காணமுடிகிறது. ஒன்று எல்லாம் அறிந்த அறிவு, மற்றொன்று அசைக்க முடியாத நம்பிக்கை. இந்த இரண்டுமே அன்பிடமிருந்து தோற்றுப் போகின்றன. எப்படியோ அறிவில்லாமலும் நம்பிக்கையில்லாமலும் கூட வாழ்ந்துவிட்டுப் போ. ஆனால் அன்பில்லாமல் வாழாதே என்று அழுத்தமாகக் கூறுவதை அறியமுடிகிறது. இதற்கும் மேலாகக் கடுமையாகக் கூறப்படுகிறது. **“அன்பு கொண்டிராதோர் சாவிலேயே நிலைத்திருக்கின்றனர்”**[24] ஆகவே அன்பு இல்லாதவர்கள் இறந்தவர்களுக்குச் சமமாகக் கருதப்படுகின்றனர். எனவே இந்த அன்பு என்ற ஒற்றைச் சொல்லைக் கொண்டு வாழ்ந்துதான் பாரேன் என்று சவுக்கடியால் அடித்துச் சொல்லுவதுபோன்று உள்ளது.

இதையும் தாண்டி **“அன்பை நாம் அதிகரிக்கத் தேவையில்லை வெறுப்பை நீக்கினால் போதும். இனிமையை நாம் உருவாக்கத் தேவையில்லை. நம் கசப்பைக் காறி உமிழ்ந்தால் போதும்”**[25] என்கிறார் இறையன்பு. ஆம் இத்தகைய உண்மையான அன்பு இல்லற வாழ்வில் இல்லாததனால் இன்று எத்தனையோ குடும்பங்கள் பிரிந்து காணப்படுவதோடு கோர்ட் கேஸ், காவல் நிலையங்கள் என அலைவதைக் காணமுடிகிறது.

**மதிப்பீடு**

- அன்பு என்பது மனித குலத்தின் உயிர் நாடி. இம்மனித குலம் இன்னமும் உயிர் வாழ்வதே அன்புடையவர்கள் இருப்பதால்தான். அன்பைக் கொடுக்கவும் பெறவும் விரும்புவதே மனித இயல்பு. இந்த இயல்பு இல்லறத்தில் இயல்பாக இருக்க வேண்டும் என அறியமுடிகிறது.
- உடலும் உயிரும் என்பது ஒன்றை ஒன்று விட்டு பிரிக்க இயலாது. அது போல அன்பும் செயலும் இணைந்திருக்க வேண்டும் என அறியமுடிகிறது.
- இதயத்தில் இருக்கும் உண்மையான அன்பை தாழ்ப்பாள் கொண்டு பூட்டி வைத்து மறைக்க முடியாது. மாறாக உண்மையான அன்பு உடையவர்கள் அதைக் கண்ணீர்த் துளிகள் வழியாக வெளிப்படுத்துகின்றனர் என்பதை அறியமுடிகிறது.
- பெரும்பாலான குடும்பங்களில் உண்மையான அன்பு இல்லாததனால் இன்றைய சூழலில் பல குடும்பங்கள் பிரிந்து காணப்படுவதை அறியமுடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. வி. நாகராசன், சங்க இலக்கியம், குறுந்தொகை, ப.109.
2. மேலது, ப.205.
3. புலியூர்க் கேசிகன் (ப.ஆ), திருக்குறள் பரிமேலழகர் உரை, ப.43.
4. திருத்தூதர் எபேசியர், புதிய ஏற்பாடு, திருவிவிலியம், ப.288.
5. திருத்தூதர் பவுல், உரோமையர், புதிய ஏற்பாடு, திருவிவிலியம், ப.234.
6. புலியூர்க் கேசிகன் (ப.ஆ), திருக்குறள் பரிமேலழகர் உரை, ப.42.
7. மேலது, ப.44.
8. மேலது, ப.44.
9. க.ப. அறவாணன், புதிய பார்வையில் ப.கீ.க. நாலடியார், ப.185.
10. க.ப. அறவாணன், அற இலக்கியக் களஞ்சியம், ப.279.
11. திண்டுக்கல் லூமி, கையில் எடு மனதில் இடு, ப.11.
12. க.ப. அறவாணன், புதிய பார்வையில் ப.கீ.க. இனியவை நாற்பது, ப.84.
13. புலியூர்க் கேசிகன் (ப.ஆ), திருக்குறள் பரிமேலழகர் உரை, ப.43.
14. திருத்தூதர் பவுல், கொலோசியர், புதிய ஏற்பாடு, திருவிவிலியம், ப.303.
15. புலியூர்க் கேசிகன் (ப.ஆ), திருக்குறள் பரிமேலழகர் உரை, ப.46.

16. மேலது, ப.46.
17. திருத்தூதர் பவுல், 1கொரிந்தியர், புதிய ஏற்பாடு, திருவிவிலியம், ப.254.
18. புலியூர்க் கேசிகன் (ப.ஆ) , திருக்குறள் பரிமேலழகர் உரை, ப.45.
19. மேலது, ப.46.
20. க.ப. அறவாணன், புதிய பார்வையில் ப.கீ.க. நலாடியார், ப.185.
21. மேலது, ப.185.
22. பத்மதேவன், நன்னெறி, நீதி நூல் களஞ்சியம், ப.95.
23. திருத்தூதர் பவுல், 1 கொரிந்தியர், புதிய ஏற்பாடு, திருவிவிலியம், ப.254.
24. திருத்தூதர் யோவன், 1 யோவான், புதிய ஏற்பாடு, திருவிவிலியம், ப.373.
25. திண்டுக்கல் லூமி, கையில் எடு மனதில் இடு, ப.121.